**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions
} Case No. CC 46 of 2024

Depositions of PW -3 witness for ________ { Prosecution / Defence / Court

Name : மோகன்

Father's Name : த/பெ. ஜார்ஜ் சுந்தர்ராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்பொழுது அமெரிக்காவில் குடியிருந்து மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த பிரிசில்லா எனது தாய். எதிரியின் மனைவியை சம்பவத்திற்கு முன்பாக எனக்கு தெரியாது. கடந்த 22.01.2023ம் தேதியன்று கோயம்புத்தூரில் இருந்து தாராபுரம் செல்வதற்காக இரவு சுமார் 10:30 முதல் 11.00 மணிக்குள்ளாக கோயம்புத்தூரில் இருந்து எனது தந்தையின் காரில் கிளம்பினோம். எனது தந்தை காரை ஓட்டினார். தாராபுரம் செல்லும் வழியாக சென்று கொண்டிருந்த பொழுது காடம்பாடி தீபம் கிரசர் அருகே சென்று கொண்டிருந்த பொழுது விபத்து ஏற்பட்டது தெரியவந்தது. நான் விபத்து ஏற்பட்டவுடன் ரோட்டில் இருந்தேன். மேலும் அப்பொழுது எனது காலில் எலும்பு முறிவுகள் ஏற்பட்டு இருந்ததை உணர்ந்தேன்.

2. சம்பத்தின் பொழுது எனது அம்மாவிற்கு என்ன ஆனது என்பது பற்றி எனக்கு அப்பொழுது தெரியாது. மேலும் சம்பவத்தின் பொழுது எதிரியை நான் பார்க்கவில்லை. ஆம்புலன்ஸ் மூலமாக எங்களை முத்தூஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து

சென்றார்கள். எனது தந்தைக்கும் விபத்தில் காயமடைந்து முத்தூஸ் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார்கள். பின்னர் எனது அம்மா சம்பவ விபத்தில் இறந்து விட்டதாக தகவல் சொல்லி நான் தெரிந்து கொண்டேன். நான் காரில் பின் இருக்கையில் நடுவில் அமர்ந்திருந்தேன். பின்னர் எனக்கு ஏற்பட்ட எலும்பு முறிவிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு அறுவை சிகிச்சை மேற்கொண்டார்கள். எனது தந்தைக்கும் அறுவை சிகிச்சை செய்தார்கள்.

3. பின்னர் விபத்து சம்பந்தமாக நான் மருத்துவமனையில் இருந்தபோது போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதாகும். புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் நடந்த விபரத்தை தான் போலீசார் விசாரணையின் பொழுது சொன்னேன். நான் போலீசார் விசாரணையின் பொழுது மற்றும் புகார் வாக்குமூலத்தில் எனது அம்மா மற்றும் அப்பா இருவரும் கோவை சாய்பாபா காலனியில் மருத்துவமனை வைத்திருப்பதாகவும் அவர்கள் மருத்துவமனைக்கு அன்றைய தினம் காலை தாராபுரத்தில் இருந்து அழைத்து வந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் அவ்வாறு சொல்லி உள்ளேன் என எனக்கு தற்பொழுது ஞாபகம் இல்லை.எனது அப்பா மற்றும் அம்மா இருவரும் சம்பவ காலத்தில் தாராபுரம் மற்றும் கோவை சாய்பாபா காலனியில் மருத்துவமனை வைத்து பார்த்து வந்தார்கள் என்றால் அதிக அளவில் கோயமுத்தூரில் வர மாட்டார்கள் தாராபுரத்தில் முழுவதுமாக மருத்துவம் பார்த்து வந்தார்கள்.

2. சம்பவ சமயத்தில் நான் அமெரிக்காவிலிருந்து வந்து ஒரு மாத காலமாக அவர்களுடன் சென்று வருவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவத்தின் பொழுது நானும் எனது பெற்றோர்களுடன் வந்த காரை நான் ஓட்டி வந்தேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் பொழுது நான் தான் கார் ஓட்டி வந்தேன் என்றும் தற்பொழுது வழக்கிற்காக எனது தந்தை ஓட்டி வந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவத்தின் பொழுது நான் கார் ஓட்டி வந்தும் எனது தந்தை எனது அருகில் அமர்ந்து வந்தார் என்றால் சரியல்ல. வாகன விபத்தில் எதிரியின் மனைவியும் இறந்துவிட்ட விபரம் பின்னர் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். போலீசார் என்னை இவ்வழக்கு சம்பந்தமாக ஒன்று அல்லது இரண்டு முறை விசாரித்து இருப்பார்கள் சரியாக ஞாபகம் இல்லை.

3. சம்பவ விபத்தானது காரை நான் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து எதிரி பயணித்து வந்த வாகனத்தின் மோதி விபத்து ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. இந்தியாவிலும் அமெரிக்காவிலும் வாகனங்கள் ஓட்டுவது முற்றிலும் மாறுபட்டது என்றால் சரிதான், ஆனால் சம்பவத்தின் பொழுது நான் கார் ஓட்ட வில்லை. நான் அமெரிக்காவில் கார் ஓட்டி வந்த நிலையில்

அதேவாறு இந்தியாவிலும் ஓட்டி சரியான திசையில் வந்து கொண்டிருந்த எதிரி வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. என் மீது தவறு வரக்கூடாது என்பதற்காக நானும் எனது தந்தையாரும் முடிவு செய்து நான் ஓட்டி வந்த வாகனத்தை எனது தந்தை ஓட்டி வந்ததாக பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. இரண்டு முறையும் போலீசார் என்னை முத்தூஸ் மருத்துவமனையில் வைத்து தான் விசாரித்தார்கள். நாங்கள் பயணித்த வாகனத்தில் ஏர்பேக் உண்டு. நான் அளித்த புகாரில் சம்பவத்தின் பொழுது ஏற்பட்டவுடன் எங்கள் காரில் ஏர்பேக் ஓபன் ஆகியதா இல்லையா என குறிப்பிட்டு போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் காலை முதல் நாங்கள் மூன்று பேரும் மருத்துவமனை சிகிச்சை முடித்து இரவு நேரம் அயராது பணியினாலும் உடல் சோர்வினாலும் மேலும் எனக்கு வலது புற வாகனங்கள் ஓட்டும் பழக்கம் உள்ள நிலையிலும் நான் காரினை ஓட்டி வந்து எதிர் திசையில் சரியாக வந்து கொண்டிருந்த எதிரி வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டு தற்போது வழக்கிற்காக மேற்படி வாகனத்தினை எனது தந்தை ஓட்டினார் என்றும் எதிரி தான் காரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றும் பொய்யான வழக்கு கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் அஜாக்கிரதையால் சம்பவ விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ விபத்து என்னுடைய அஜாக்கிரதையால் தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.25 18:15:05 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 46 of 2024

Depositions of PW -4 witness for ________ Prosecution / Defence / Court

Name : நிர்மலா

Father's Name : க/பெ. ஞானராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th **day of February** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் வேலாண்டிபாளையம், போஸ்ட் ஆபீஸ் அருகில் குடியிருந்து கொண்டு வங்கி மேலாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது வீட்டில் இருந்து வருகிறேன். சம்பவத்தில் இறந்த பிரசில்லா எனக்கு அண்ணி முறையாகும். கடந்த 23.01.2023 ஆம் தேதி மோகன் எனக்கு போன் செய்து காரில் சென்று கொண்டிருந்த பொழுது காடாம்பாடி தீபம் பிரஷர் அருகே எதிரில் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் சம்பவ விபத்தில் பிரசில்லா இறந்து விட்டதாகவும் உடலை கோவை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்திருப்பதாகவும் தானும் தனது அப்பாவும் முத்துஸ் மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாகவும் தகவல் சொல்ல நானும் எனது கணவரும் மருத்துவமனை சென்று பார்த்த பொழுது இருவர்களுக்கும் உடலில் அடிபட்டு சிகிச்சையில் இருந்தார்கள்.

2. பின்னர் கோவை அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் இருந்த பிரிசில்லா உடலை பார்த்தோம். இது சம்பந்தமாக மோகன் சூலூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இது

சம்பந்தமாக பிரிசில்லா பிரதமத்தின் மீது போலீசார் கோவை அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் பிரேத விசாரணை மேற்கொண்ட பொழுது உடனிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது சகோதரர் மற்றும் சகோதரரின் மனைவி இருவரும் தாராபுரம் மற்றும் கோவையில் கிளினிக் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான். அன்றைய தினம் எனது சகோதரர் மற்றும் சகோதரரின் மனைவி இருவரும் தாராபுரத்தில் இருந்து கோவை சாய்பாபா காலனியில் உள்ள கிளினிக்கு வந்து இரவு நேரத்தில் தான் கிளம்பினார்கள் என்றால் சரிதான். கிளினிக் பணி முடித்து இருவரும் எங்கள் வீட்டிற்கு வந்து உணவு அருந்திவிட்டு ஓய்வு எடுத்த பின்பு தான் கிளம்பினார்கள்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.02.25 18:15:10 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**